# அன்று முதல் இன்று வரை உலகை உலுக்கிய வைரஸ் நோய்கள்

| ஆண்டு(கி.பி) | வைரஸ்நோய் | குறிப்பு |
|---|---|---|
| 165–180 | அன்டோனைன் பிளேக் | ரோம் சாம்ராஜ்ய காலத்தில் பரவிய இந்த நோய் எதிரி நாட்டுப் படை வீரர்களிடமிருந்து பரவியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அது வைசூரி அல்லது பெரியம்மை நோய் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். |
| 541–542 | ஜஸ்டினியன் பிளேக் | ரோம் சாம்ராஜ்யத்துக்குப் பிறகு இன்றைய துருக்கி உள்ளிட்ட பகுதிகளைக் கொண்ட பைஸன்டைன் சாம்ராஜ்யத்தில் தாக்கியது ஜஸ்டினியன் பிளேக். ஐரோப்பா முழுவதும் பரவி, ஆசியா, ஆப்பிரிக்க கண்டத்தின் வடக்குப் பகுதி என கோர தாண்டவமாடியது. இந்த பிளேக் நோய் 10 கோடி பேரின் உயிரைக் குடித்ததாகக் கூறப்படுகிறது. |
| 735–737 | ஜப்பான் பெரியம்மை நோய் | அன்றைய ஜப்பானின் மக்கள்தொகையில் மூன்றில் ஒரு பங்கு இந்த நோயினால் மடிந்தனர். |
| 1347 | கரிய மரணம் | ஆசியாவில் உருவான இந்த பிளேக் நோய் 1347–ஆம் ஆண்டில், கப்பல் வழியாக நடைபெற்ற அன்றைய வாணிபத்தில் ஈடுபட்ட மாலுமிகள், வணிகர்கள் மூலம் ஐரோப்பாவுக்குப் பரவியது. |
| 1846–1860 | காலரா நோய் | இந்தியாவில் உருவானதாகக் கூறப்படும் இந்த நோய் பல நாடுகளிலும் பரவி தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் இது மூன்றாம் காலரா நோய் என்று அறியப்படுகிறது. 1846–1860 காலகட்டத்தில் இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. |
| 1855–1959 | மூன்றாம் பிளேக் | சீனாவில் 1855–ஆம் ஆண்டு பரவத் தொடங்கியது. பின்னர் சீனா, ஹாங்காங், இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பரவியது. ஒரு நூற்றாண்டு காலத்துக்கு வெவ்வேறு பகுதிகளில் தாக்கிய இந்த பிளேக் நோயால் பலியானவர்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றரை கோடி. |
| 1889–1890 | ரஷ்ய ஃப்ளூ | தொற்றுநோய் வகையைச் சேர்ந்த இந்த காய்ச்சல் 1889–ஆம் ஆண்டு அக்டோபரில் ரஷ்யாவில் தொடங்கியபோதிலும், ஆசிய ஃப்ளூ என்றும் அறியப்படுகிறது. |
| 1918 | ஸ்பானிய ஃப்ளூ | அமெரிக்க ராணுவ முகாமில் முதலில் பரவத் தொடங்கிய இந்த தொற்று பற்றிய செய்திகள், ஸ்பெயின் ஊடகங்களில் வெளிவந்தன. முதலாம் உலகப்போர் காலத்தில் ஊடகங்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளால் பிற இடங்களில் இது பற்றி தகவல்கள் வெளியாகவில்லை. இதையடுத்து இது ஸ்பானிய ஃப்ளூ என்று பெயர் பெற்றுவிட்டது. |
| 1980 | பெரியம்மை | பெரியம்மை நோய்தொற்று மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பு தோன்றியதாகக் கருதப்படுகிறது. இதன் பிறப்பிடம் எகிப்து பிரமிடுகளில் உள்ள மம்மிகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இது பின்னர் அரேபியா வழியாக ஐரோப்பா, ஆசியா என வியாபித்து மூவாயிரம் ஆண்டுகளாக உலகையே மிரட்டி வந்தது. இந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டோரில் முப்பது சதவீதம் பேர் உயிரிழந்தனர். கடந்த 20–ஆம் நூற்றாண்டில் மட்டும் 30 கோடி பேர் இதற்கு பலியாகினர். இத்தொற்றுக்கு காரணமான வைரஸை 15–ஆம் நூற்றாண்டிலேயே விஞ்ஞானிகள் அடையாளம் கண்டதாகக் கூறப்படுகிறது. இதற்கான தடுப்பு மருந்து 18–ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், உலகிலிருந்து முற்றிலும் ஒழிக்கப்பட்டதாக உலக சுகாதார நிறுவனம் 1980–இல் அறிவித்தது. |
| 1981 | எச்ஐவி (எய்ட்ஸ்) | 1981–ஆம் ஆண்டு எச்ஐவி வைரஸ் அடையாளம் காணப்பட்டது ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டோரிடையே பரவியது முதலில் தெரிய வந்தது. தொடர்ந்து நடைபெற்ற ஆராய்ச்சியில், மேற்கு ஆப்பிரிக்காவில் சிம்பன்ஸி குரங்கு இனத்தில் இந்த வைரஸ் முதலில் வந்ததாகக் கூறப்பட்டது. இந்த வைரஸால் சுமார் 3.2 கோடி பேர் பலியானதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்று கோடிக்கும் அதிகமானோர் வைரஸ் பாதிப்புடனே வாழ்ந்து வருகின்றனர். |
| 2009 | எச்1என்1 | பன்றிக் காய்ச்சல் எனவும் அறியப்பட்ட இந்த நோய்த்தொற்று சுமார் 10 ஆண்டு காலத்தில் உலகெங்கிலும் சுமார் 5.75 லட்சம் பேரின் உயிரை பலிகொண்டது. |
| 2014 | எபோலா | கினியா நாட்டில் பரவத் தொடங்கிய இந்த நோயால் 11,000 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். |
| 2019 | கொரோனா | 2019–ஆம் ஆண்டு இறுதியில் சீனாவின் வூஹான் மாகாணத்தில் மீன் சந்தையிலிருந்து பரவிய இந்த வைரஸ், வெகு சில மாதங்களிலேயே படிப்படியாக உலகம் முழுவதும் பரவி பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. |

www.surabooks.com